**மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், விழுப்புரம்**
**<u>அசல் வழக்கு எண். 411/2024</u>**

| | | | |
|---|---|---|---|
| **சாட்சியின் பெயர்** | தங்கமணி | **மதம்** | இந்து |
| **த/பெ** | ராதாகிருஷ்ணன் | **தொழில்** | சுயதொழில் |
| **சாட்சி எண்.** | வா.சா.2 | **வயது** | 47 |
| **ஊர்** | விழுப்புரம் | **மாவட்டம்** | விழுப்புரம் |

24.11.2025 அன்று 1873ம் ஆண்டு சட்டம் 10ன்படி என்னால் உறுதி கொடுத்து சாட்சியமளிக்கப்பட்டது

**விசாரணை தொடங்கும் நேரம்** : பிற்பகல் 12.07 மணி
வாதி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். பிரதிவாதிகள் ஆஜரில்லை.

**<u>குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் தெரியாது. என்னுடன் படித்தவர். வாதி எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பிரதிவாதி என்னுடைய நண்பரிடம் வீட்டை விற்பதற்காக பணம் வாங்கியிருந்தார். கிரையம் செய்து கொடுக்கவில்லை, அதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வீடு கிரையம் செய்வதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளதாக சொல்லும் நிலையில் அந்த வீட்டின் விலாசம், சர்வே நெம்பர் மற்றும் விஸ்தீரணம் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீடு விற்பனை சம்மந்தமாக தரப்பினர்கள் வாதியும், பிரதிவாதியும் என்ன பேசிக்கொண்டார்கள் என்று தெரியுமா என்றால் பேசிக்கொண்டார்கள். பேசும்போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை. செண்ட் கணக்கில் பேசினார்களா அல்லது சதுரடி கணக்கில் பேசினார்களா என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த வீட்டை நான் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. கிரைய உடன்படிக்கை பத்திரத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். பத்திரப்பத்திவு அலுவலகத்திற்கு வெளியே வைத்து சாட்சி கையொப்பம் செய்தேனா அல்லது வெளியே வைத்து கையொப்பம் செய்தேனா என்றால் இரண்டு இடத்திலும் சாட்சி கையொப்பம் செய்தேன். பிரதிவாதியின் பெயரை தெரியுமா என்றால் சங்கர், அழகுசுந்தரி. அவர்கள் கிரைய உடன்படிக்கை பதிவுக்கு முன்பாகவே அன்னபூர்ணா பைனான்ஸ் நிறுவனத்தில் பணம் வாங்கியது தெரியுமா என்றால் தெரியும். கிரையம் உடன்படிக்கைக்கு முன்பாவே தாவா சொத்தில் அடமானக்கடன் இருந்தது தெரியுமா என்றால் தெரியும். கிரையத்தொகை எவ்வளவு என்றால் ரூ.10,00,000/-. கிரைய உடன்படிகையை பார்த்து படித்துவிட்டு தான் நான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். கிரைய உடன்படிக்கையில் நாளது தேதியில் பெற்றுக்கொண்ட தொகையாக ரூ.9,52,000/- 05.06.2023

குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் ஆமாம். நான் சங்கர் மற்றும் அழகுசுந்தரியிடம்கேட்டபோது ஏற்கனவே பைனான்ஸ் நிறுவனத்திடம் பணம் கொடுப்பதற்காக ரூ.5,00,000/-யை பெற்றுக்கொண்டதாகவும், அன்று ரூ.4,52,000/- பெற்றுக்கொள்வதாகவும் சொன்னார்கள். நான் மேற்சொன்ன விவரங்கள் கிரைய உடன்படிக்கையில் உள்ளதா என்றால் இல்லை. நான் சொல்வது போல் ஏற்கனவே பணம் கொடுத்திருந்தால் கிரைய உடன்படிக்கை ஏற்பட்ட அன்று எந்த பணமும் கொடுக்காமல் தான் பிரதிவாதிகளிடம் எழுதி வாங்கியிருக்ககூடும் என்று சொன்னால் அவர்கள் ரூ.4,52,000/- கொடுத்தார்கள். கிரைய உடன்படிக்கையின்படி ரூ.9,52,000/- அன்றைய தேதியில் கொடுக்கப்பட்டதாக கிரைய உடன்படிக்கை எந்த மறுபயனும் இல்லாமல் தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ரூ.5,00,000/-த்தை அவர்கள் எந்த தேதியில் வாங்கினார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. அந்த பணத்தை வாங்கும்போது நான் உடனிருந்தேனா என்றால் இல்லை. அவர்கள் சொன்னார்கள். சங்கரும், அழகுசுந்தரியும் யார் என்றும், எந்த ஊரைசேர்ந்தவர்கள் என்றும், சொத்து எந்த இடத்தில் இருக்கிறது என்றும் அந்த விவரமே எனக்கு தெரியாது என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னாலும் சரியல்ல. பிரதிவாதிகள் அன்னபூர்ணா பைனான்ஸிடம் வாங்கிய கடனை பைசல் செய்வதற்காக ரூ.5,00,000/- மட்டும் தான் வாதியிடமிருந்து கடனாக பெற்றார்கள் என்று சொன்னாலும், ரூ.50,00,000/- மதிப்பிலான தாவா சொத்தை ரூ.10,00,000/-க்கு கிரையம் செய்துக்கொடுக்க வேண்டிய அவசியம் பிரதிவாதிகளுக்கு இல்லை என்று சொன்னாலும் வாதியும் நானும் சேர்ந்துக்கொண்டு கிரைய உடன்படிக்கையை தயார் செய்து பிரதிவாதிகள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய வேண்டியது என்று சொன்னாலும் சரியல்ல.

**விசாரணை முடிவுற்ற நேரம்** : பிற்பகல் 12.26 மணி

அவையறிய இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, பின்னர் சாட்சி சொன்ன பதில் சரியென சாட்சியால் ஒப்புகொள்ளப்பட்டு, என் முன்பாக கையொப்பம் இடப்பட்டது.

(ஒம்).S.ஜீவநந்தினி,
மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
விழுப்புரம்.